**தேதி :** 02.06.2026 SC.No. : 383/2025 PW :1 சுடலைமணி

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னுடைய மனைவிக்கும், எனக்கும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைகள் உள்ளன என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு என்னுடைய மனைவிக்கும், குழந்தைகளுக்கும் நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், மீனாட்சி என்பவருக்கும் தகாத தொடர்பு இருந்தது என்றால் சரியல்ல. தற்போது நானும், மீனாட்சியும் சேர்ந்து வாழ்கிறோம் என்றால் சரியல்ல. 2ம் எதிரியின் நகைகளை விற்று மீனாட்சி பேரில் நான் ஆட்டோ வாங்கி கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி நான் பராமரிக்காததால் குழந்தைகளுடன் அவர் வீட்டிற்கு சென்றார் என்றால் சரியல்ல.

எனக்கும், மீனாட்சி என்பவருக்கும் தொடர்பு இருப்பதினால் 2ம் எதிரி ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் மனு விசாரணையில் மனைவி, பிள்ளைகளுடன் என்னை சேர்ந்து வாழச் சொன்னார் என்றால் சரிதான்.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.03 19:21:00 +0530